புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 48. TML1187 - கவிப்பித்தனின் சிறுகதைகளும் பெண்ணிய சித்தரிப்பும்

மு.சுவேதா
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி தன்னாட்சி, திருப்பத்தூர் – 635 601 திருப்பத்தூர் மாவட்டம்

**ஆய்வு சுருக்கம்**

*மனித சமூகத்தில் பெண்களின் பங்களிப்பை மறுக்க முடியாது அவர்கள் சமூகத்திற்குத் தலைமை தாங்கியிருந்தார்கள் என்று ஆய்வுகள் சொல்கின்றன. பிற்காலத்தில் பெண்கள் அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள் என்றும் கூறுவர். பெண் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக தத்துவமே பெண்ணியம் என்று அழைக்கப்படுகிறது.*

*கவிப்பித்தன் தமிழின் நவீனபடைப்பாளிகள் குறிப்பிடத்தக்கவர். புனைகதைப் பரப்பில் அவர், சிறுகதை, புதினம் என்னும் இரண்டு வடிவங்களிலும் எழுதிவருகிறார். தமிழ்நாட்டின் வடமாவட்டப் பகுதிகளைக் கதைக்களங்களாகவும் மனிதர்களைக் கதைமாந்தர்களாகவும்கொண்டுபடைத்துவருகிறார். அவருடைய புனைகதைப் பரப்புகளில் பெண்கள் எவ்வாறு இடம்பெற்றுள்ளனர் என்பதை 'அத்திப்பூசண்பகம்','எட்டிமரம்'என்னும் இரண்டு சிறுகதைகளை முன்வைத்து இக்கட்டுரைஆராய்கிறது. கவிப்பித்தன் சிறுகதைகளில் பெண்கள் தனித்துவம் உடையவர்களாகப் படைக்கப்பட்டிருக்கின்றனர்.*

**குறிச்சொற்கள்**

*அத்திப்பூ சண்பகம், எட்டிமரம், பெண்கள்*

**முன்னுரை**

*ஆணும் பெண்ணும் உயிரினம் பகுக்கப்பட்டிருக்கிறது. மனித இனத்தில் பெண்கள் வரலாற்றில் ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள். பெண் என்பவள் பாலின அடிப்படையில் தனித்துவம் உடையவளாக இருக்கிறாள். அவளைச் சுற்றிய பிம்பங்கள் மிகக்கவனமாகச் சமூகத்தால் கட்டமைக்கப்படுகின்றன. ஒருபெண், பெண்ணாகப் பிறப்பதைக் காட்டிலும், பெண்ணாகக் கட்டமைக்கப்படுகிறாள் என்பதே உண்மையாகும். பெண்ணைச் சுற்றி இச்சமூகம் உருவாக்கிவைத்திருக்கும் கட்டுமானங்கள், கற்பிதங்கள் ஏராளம்.*

*கவிப்பித்தன் என்னும் இலக்கியப்படைப்பாளி தன்னுடைய படைப்புகளில் பெண்களைத் தனித்துவமாகப் படைக்கிறார். அவருடைய இரு சிறுகதைகளில் பெண்கள் சித்தரிக்கப்பட்டுள்ள விதத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.*

**எழுத்தாளர் கவிப்பித்தன்**

*கவிப்பித்தன் வடதமிழ்நாட்டின் வடாற்காடு மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்ட அன்றைய வேலூர் மாவட்டம், இன்றைய இரணிபேட்டை மாவட்டத்தில் உள்ள வாலாசாபேட்டை வட்டத்தின் பொன்னைவழி வசூர் என்ற சிற்றூரில் பிறந்தார்.சென்னைப் பல்கலைக்கழகத்தில் விலங்கியல்துறையில் இளம் அறிவியல் பட்டமும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இதழியல் மற்றும் மக்கள் தகவல் தொடர்பியலில் முதுகலைப் பட்டமும் பெற்றார். சிறுகதைகளும் புதினங்களும் படைத்துள்ள படைப்பாளியாவார்.*

**பெண்ணியம் விளக்கம்**

*ஆங்கிலத்தில் (Feminism) என்று வழங்கும் கலைச்சொல்லே தமிழில் பெண்ணியம் என்று வழங்கப்படுகிறது. பெண்ணியக் கருத்துநிலை என்பது, பெண்ணியவாதம், பெண்ணிய ஏற்பு, மகளிரியல்*

பெண்ணியக் கொள்கை எனப் பலசொற்களால் வழங்கப்படுகின்றது. முற்காலத்தில் ‘‘Womanism’’ என்றுவழங்கப்பட்டசொல்லே, பிற்காலத்தில்திமீனீவீஸீவீஊனீ என்றுவழங்கப்பட்டது. அதாவது பெண்ணைக் குறித்த சிந்தனை என்ற பொதுநிலையிலிருந்து, பெண்விடுதலைச் சிந்தனை என்ற அளவில் பெண்களின் விடுதலையை, பாலின சமத்துவத்தைக் கோரும் சொற்பதமாகப் பெண்ணியம் என்பது பயன்படுத்தப்பட்டது.

பெண்ணியம் பற்றித் தொல்காப்பியர்

‘‘பெருமையும்உரனும்ஆடுஉமேன’’ ( தொல்.பொருள்.களவியல்– 7 )

என்று ஆணுக்கான இயல்பை வரையறை செய்கிறார் தொல்காப்பியர்.

இதன் அடிப்படையில் ஆண்மகன் உரனுடையவனாகப் பெருமைக்குரியவனாக கட்டமைக்கப்படுகிறான்.

‘‘அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற் குரிய’’ (தொல்.பொருள்.களவியல்– 8)

என்பவை பெண்களுக்குரிய பண்புகளாகத் தொல்காப்பியரால் வரையறை செய்யப்படுகின்றன. இந்த வரையறை என்பது தொல்காப்பியர் என்னும் தனிமனிதரின் வரையறை அல்ல. அது தொல்காப்பியருக்கு முன்பிருந்த, அவருடைய சமகாலத்திலிருந்த தமிழ்ச் சமூகத்தின் வரையறை என்பதை உணரமுடிகிறது. ‘கற்பு’என்பது பெண்களுக்குக் கட்டாயமாகஆக்கப்படும் நிலையையும்காணமுடிகிறது.

பெண்கள்,அச்சம் நாணம் மடம் என்ற இயல்புகளைக் கொண்டு அழகுடையவளாக இருக்கவேண்டும் என்பதும், அனைத்து உயிர்களிடமும் இரக்கமுடையவளாகவும் அமைதியின் உருவாகவும் தனித்தியங்கும் ஆற்றல் இல்லாதவளாகவும் இருக்கவேண்டும் என்பது இச்சமூகத்தின் எதிர்பார்ப்பும் விதியும் ஆகும். தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை பெண் இவ்வாறே உருவாக்கப்படுகிறாள்.

மேற்கூறிய மனோபாவத்தில் ஆண் பெண் என இருபாலருக்கும் தனித்தனி வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பெண் இயல்பாகவே மெல்லியல்பு உடையவள். எனவே அவள் இப்படித்தான் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும். அவள் வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது என்றெல்லாம் கூறி வளர்க்கப்படும்போது, இயல்பாகவே பெண்களிடம் படியும் பண்புகள், ‘பெண்மை’என்று மென்மை தரப்பட்டு நிலை நிறுத்தப்படுகின்றன. இந்த வரையறையை மீறும் பெண், சமூகத்தின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் சிதைப்பவளாகக் கருதப்படுகிறாள்.

**சங்ககாலம் முதல் தற்காலம்வரை**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சங்ககாலத்தில் பெண்கள் ஒப்பீட்டளவில் தற்காலத்தில் இருப்பதைவிட உரிமையும் சுதந்திரமும் பெற்றிருந்தனர் என்பதை அறியமுடிகிறது. அதாவது, பெண் அடிமைப்படுத்தப்பட்ட காலமே எனினும், அவள் தனித்துவமான உரிமைகளைப் பெற்றிருந்தாள். அவற்றில் ஒன்று தன் வாழ்க்கை இணையைத்தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை ஆகும். சங்ககாலப் பெண்கள் இந்த உரிமைகள் பெற்றிருந்தமையைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஆனாலும் சமூகத்தில் பெண்களின் இடம்என்பது இரண்டாம் தரமாகவே வைக்கப்பட்டிருந்தமையைக் காணமுடிகிறது. சங்ககால பெண்கள்ஆணாதிக்கச் சமூகத்தில் இரண்டாம்தரக் குடிமகளாக, கணவனே தெய்வம் என்று கொண்டாடுபவர்களாக ஆணின் தேவையை மட்டும் நிறைவேற்றும் பணிப்பெண்களாக வாழ்ந்து வந்தார்கள் என்பதும் கருதத்தக்கதாகும்.

‘‘வினையே ஆடவர்க் குயிரேவாள்நுதல்
மனையுறை மகளிர்க்குஆடவர்உயிர்’’ ( குறுந்.135)

என்பது குறிப்பிடத்தக்க பதிவாகும். தொழில் செய்து பிழைத்தல் ஆணின் கடமையாகவும் பொறுப்பாகவும் ஆக்கப்பட்டிருந்த சமூகத்தில், வினை ஆடவனின் உயிராகச் சொல்லப்படுகிறது. எனில், பெண்ணின் உயிர்எதைச் சார்ந்தது என்று அடையாளப் படுத்தும்போது, மனையுள் உறைந்திருக்கும் பெண்டிருக்கு ஆடவரே உயிர் எனப்படுகிறது. இது முற்றிலுமாக ஆணைச்சார்ந்தே பெண்தன் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய நிலையைக் காட்டுகிறது.

மேற்குறித்த நிலை என்பது காலப்போக்கில் மேலும் வளர்ந்து வந்தது. அதாவது, பெண்கள் இரண்டாம் தரக்குடிமகளாக ஆக்கப்பட்ட, உரிமைகள் பறிக்கப்பட்ட, ஆணைச் சார்ந்து வாழும் வாழ்க்கைக்கு ஆட்படுத்தப்பட்டனர். இயல்பாக ஒரு உயிரி அடைந்திருக்க வேண்டிய உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகப் பெண்கள் ஆக்கப்பட்டனர் என்பது தமிழ்ச்சமூகத்தின் ஆயிரம்ஆண்டுக்கால வரலாறு ஆகும்.

**உலகம் முழுவதும் பெண்களின் நிலை**

உலகம் முழுவதும் பால்வகை என்பது ஆண் பெண்ணை அதிகாரம் செய்யும் பான்மையில்

அமைந்துள்ளது. ஏனெனில் ஆணாதிக்க சமூகம் வகுத்ததுதான் பால் வகை என்பது ஆண் தனக்குரிய சமூகக்கனவாகராணுவம், தொழிற்சாலை, அரசியல், நீதி, தொழில்நுட்பம், கல்வி போன்றவற்றைத் தெரிந்துகொண்டான். பெண்ணுக்கு இல்லம் என்பதை உரிமையாக்கி அதற்குள் அவள் ஆட்படுத்தப்படுகிறாள். ஆதலால் சமூகத்தில் பெண்ணின் இயக்கம் குறைந்தது. குடும்ப அமைப்பில் அடங்கிக்கிடக்கும் பெண், சமூகத்தை அணுக அவளுக்கு கணவன் என்ற துணை தேவைப்பட்டது. ஆதலால் அவள் சுயசிந்தனை இல்லாதவளாக ஆடவன் கைப்பாவையாக உருவாக்குவதற்குத் துணைபோ யிற்று. ஆண் பெண் இடையே அதிகார உறவுகள் வளர்ந்து பெருக்க குடும்பம் என்ற அமைப்பு காரணமா யிற்று.

### கவிப்பித்தனின் சிறுகதைகளில் பெண்கள்

தமிழ்நாட்டின் வடமாவட்டப் பகுதிகளுள் ஒன்றாகிய ஆற்காடு என்னும் பகுதியை நிலவியல் வெளியாகக் கொண்டு கவிப்பித்தன் தனது புனைகதைகளைப் படைத்து வருகிறார். குறிப்பாகப் பெண்களை முதன்மைக் கதைமாந்தர்களாகக் கொண்ட பல புனைகதைகளைஅவர் படைத்திருக்கிறார். கவிப்பித்தன் புனைகதைகளில் வெளிப்படும் பெண்கள் பல நிலைகளில் அமைகின்றனர்.

### அத்திப்பூ செண்பகம் : சிறுகதை

அத்திப்பூ செண்பகம் என்பது கவிப்பித்தனின் ஒரு சிறுகதைத் தலைப்பாகும். அச்சிறுகதையின் முதன்மைக் கதைமாந்தராகச் செண்பகம் படைக்கப்பட்டிருக்கிறார். செண்பகம் வெளியுலகம் அறியாதவள்; முற்றிலும் வீட்டைச்சார்ந்தே வளர்க்கப்படுகிறாள். அதனாலேயே கூச்சசுபாவம் உள்ளவளாகவும் வெளியுலகம் அறியாதவளாகவும் இருக்கிறாள். செண்பகம் தனது சொந்தத் தாய்மாமனுக்கே திருமணம் செய்து வைக்கப்படுகிறாள். அவர்களுக்கு ஒரு பெண்ணும் ஒரு ஆணும் என இரண்டு குழந்தைகள் பிறக்கின்றனர். இந்நிலையில் இரண்டாவது குழந்தை பிறந்த மூன்றாவது நாளில் செண்பகத்துக் குக்குடும்பக் கட்டுப்பாடு அறுவைச்சிகிச்சை நடத்துவது என முடிவாகிறது. ஒரு மருத்துவமனையில் அறுவைச்சிகிச்சையும் நடந்தேறுகிறது. மயக்கமருந்தின் வீரியம் தெளிந்த பிறகு, மயக்கத்திலிருந்து விழிப்புற்று எழுந்த செண்பகத்துக்கு அவளுடைய தாயார், அறுவைச்சிகிச்சை செய்த மருத்துவரைக் காட்டுகிறாள்.

அந்த மருத்துவரைக் கண்ட செண்பகம் அதிர்ச்சி அடைகிறாள். ஒரு ஆண் மருத்துவரா தனக்கு அறுவைச்சிகிச்சை செய்தவர் என்று பதைக்கிறாள். அந்தப் பதைப்பின் காரணமாக அவள் மயக்க முறுகிறாள். தனக்கு அறுவைச்சிகிச்சை செய்தவர் ஒரு ஆண் மருத்துவர் என்ற செய்தியை அறிந்த கணத்திலிருந்து செண்பகம் மிகுந்தமன உளைச்சலுக்கு ஆளாகிறாள். தனதுநிர்வாணத்தை, அந்தரங்க உறுப்புகளை ஓர்அந்நிய ஆண்மகன் பார்த்துவிட்டானே என்ற அவமானமும் வெட்கமும் அசூயையும் அவளைச் சூழ்ந்து கொள்கின்றன. இந்த மன உளைச்சலில் அவள் மூன்று முறை தற்கொலைக்கு முயற்சி செய்கிறாள். செண்பகம் தற்கொலைக்கு முயலுவதற்கான காரணத்தையாராலும் அறியமுடியவில்லை. தாய் உட்பட உறவுகள், சொந்த பந்தங்கள் எவ்வளவோ கேட்டும் தற்கொலை முயற்சிக்கான காரணத்தைச் செண்பகம் தெரிவிக்கவில்லை. என்ன கேட்டாலும் வாய்திறக்காத செண்பத்தைக் கண்டு, அவளுடையகணவன், மாமியார், நாத்தனார் உள்ளிட்ட அனைவரும் திகைத்துநிற்கின்றனர்.

செண்பகத்துக்குக் காத்துக் கருப்பு தீண்டியிருக்கும் என்று திருநீறு பூசினர்.தேசிகாமணி பண்டிதர் வேப்பிலை மந்திரம் போட்டார். வடக்குமலையானுக்கு மொட்டை அடிப்பதாய் காசு முடிந்து கட்டினாள் மொட்டச்சி. எதற்கும் தெளியவில்லை. பித்துப்பிடித்தவள் போல வேகிடந்தாள் செண்பகம். இடை யிடையே பிதற்றவும் தொடங்கினாள்.ஒருநாள் தூக்கத்தில் அலறினாள்.

"அய்யோ... அம்மணமா பாக்கறாங்களே...பாக்கறாங்களே..." என்று செண்பகம் அலறியபோது தான் விழித்துக் கொண்டாள் மொட்டச்சி. மகளின் தலையைத்தூக்கி மடிமீது வைத்து, முடியை நீவியபடி வாஞ்சையோடு மொட்டச்சி பதமாய் கேட்க, ஓ வென்று கதறினாள் செண்பகம்.

"ஆம்பளடாக்டரு என்ன அம்மணமாபார்த்து, ஆபரேசன் பண்ணிட்டாரே... ஒடம்பு கூசுதே... ஒடம்பு நெருப்பாட்டம் எரியுதே' என்று கதறினாள்." எனுக்குமயக்க மருந்துகுட்த்து... ஆம்பளடாக்டரு எங்ஒடம்ப அம்மணமாபாத்துட்டாங்களே.." என்று பிதற்றினாள்.

"உயிரகாப்பாத்துறடாக்டருங்ககடவுளுமாதிரிமா... அவங்கள்லஆம்பளபொம்பளஏது... எல்லாமே தெய்வம் இல்லியாகண்ணு" என்றாள்அவளது தாய் மொட்டச்சி.

"தெய்வம்னாக் கூட அது ஆம்பள தெய்வம்தானேம்மா?!" என்றாள் செண்பகம்.

இதை நினைத்து நினைத்து செண்பகம் மன அழுத்தத்தால் தனது உயிரைமாய்துக் கொண்டாள்.

### பெண்ணுடல் பற்றிய கற்பிதம்

*பெண்ணுடல் என்பது கணவனைத் தவிர பிற ஆண்மகன்களிடமிருந்து ஒளித்து வைக்கப்பட வேண்டியது என்று கருதுகிற பெண்களின் பிரிவைச் சேர்ந்தவளாகச் செண்பகம் சிறுகதையில் படைக்கப்பட்டிருக்கிறாள். ஒரு பெண்ணின் உடல் கணவனுக்கு மட்டுமே படைக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையின் வெளிப்பாடே, ஒரு மருத்துவர் தனக்கு அறுவைச் சிகிச்சை செய்தமையைச் செண்பகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாமல் போனதற்குக் காரணமாகும். பெண்ணுடலை இவ்வாறு புனிதப்படுத்துகிறபோதே, அதன் மற்றொரு பகுதியாகிய தீட்டு, இழிவு ஆகியன பெண்ணுடலின் மீது சார்த்தப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்வதாகிறது. பெண்ணுடலைத் தீட்டு என்பதும் புனிதம் என்பதும் ஆணாதிக்கச் சிந்தனையின் கருத்தாக அமைகிறது. இச்சிந்தனையின் தொடர்ச்சியே பெண்ணுடல் கணவனுக்குப் படைக்கப்படும் படையல் பொருள் என்பதாக அமைகிறது.*

*பெண்கள் அனைவருமே பெண்ணியச் சிந்தனை கொண்டவர்களாக இருப்பர் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை; அவர்கள் பெண் குறித்த சிந்தனைத் தெளிவு பெற்றவர்களாக இருப்பர் என்பதனை உறுதிகூற இயலாது என்பதையே 'அத்திப்பூசெண்பகம்'சிறுகதை எடுத்துக்காட்டுகிறது. ஆணாதிக்க நோக்கை ஒரு பெண்ணும் கொண்டிருக்க முடியும் என்பதற்கான எடுத்துக்காட்டாகவே செண்பகம் படைக்கப்பட்டிருக்கிறாள்.*

*இந்தச் சிறுகதையின் மூலம் பெண்களிடம் படிந்துகிடக்கும் உடல் பற்றிய அறியாமையை வெளிச்சமிட்டுக் காட்ட கவிப்பித்தன் முயற்சி செய்திருக்கிறார் எனலாம். பெண்ணுடல் புனிதப்படுத்தப்படவும் கூடாது; இழிவுபடுத்தப்படவும் கூடாது என்பதே சிறுகதையின் கருத்தியலாக அமைகிறது.*

### எட்டி மரம் சிறுகதை

*கனகாம்பரம் என்பவளின் கணவர் குடிக்கு அடிமையானவர். குடித்துவிட்டு வந்தால் மனைவியர் மருமகள் யார் என்பது கூடத்தெரியாமல் இருப்பார். வீட்டில் இருக்கும் பெண்களைத் தகாத வார்த்தைகளில் பேசுவார். ஊரில் இருபவர்கள் எல்லாரிடமும் பொய் சொல்லி தனது மனைவிக்கு உடல்நலம் சரி இல்லை என்று பணம் வாங்கிக்கொள்வார். அவர் ஆடாத ஆட்டமில்லை, பேசாத பேச்சில்லை. எந்நேரமும் குடித்து குடித்து குடல்வெந்து போய்விட்டது, மருத்துவமனையில் வெந்துபோன குடலை வெட்டி எடுத்துவிட்டு பிளாஸ்டிக்பை பொருத்தினால்தான் பிழைக்கமுடியும் என்ற நிலை. அதற்கு இரண்டு லட்சரூபாய் செலவு ஆகும் என்று சொல்லி விட்டார்கள் மருத்துவர்கள்.*

*இரண்டு லட்சரூபாய் யார் கட்டுவது? யாரிடம் இருக்கிறது இருக்கும் கொஞ்ச நஞ்ச பணத்தையும் குடித்து அழித்து விட்டாரே சேமிப்புக்கு அர்த்தமே தெரியாத பெரிய மனுசன். இவர் பெற்ற இரண்டு பிள்ளைகளும் அரைகுறை வருமானத்தில் குடும்பத்தை உருட்டிக் கொண்டிருக்கிறார்கள் எங்கே போவார்கள் இரண்டு லட்சத்திற்கு யார் கொடுப்பார்கள் எதை நம்பிகடன் வாங்குவது? அப்படியே விட்டுவிட முடியுமா இரண்டு லட்சபணத்திற்காக ஒரு உயிரையமனுக்கு வாரிகொடுத்து விட முடியுமா என்றது ஊர்.*

*அவர் பட்டாலத்தில் இருந்து வந்த நாள்முதல் ரணம்பட்டுரணம்பட்டு மனசுகருகிப்போன கனகாம்பரம் கூட இந்த ஒரு வாரமாக இரவும் பகலும் யோசனையாய் இருக்கிறாள். தூக்கம் இல்லை சோறு இல்லை என இருந்தாலும் எத்தனை பெரிய ஆம்பளை தெரிந்து எப்படி வாரிகொடுத்து விட முடியும்?அவர்களின் இரண்டு அவர்களின் இரண்டு மகன்களை வரவழைத்து எப்படியாவது அப்பாவின் உயிரை காப்பாற்றிவிட வேண்டும் என்று அவர்கள் இருவரிடமும் கெஞ்சுகிறாள். அன்றிலிருந்து அவர்களின் அப்பாவை பார்க்க மருத்துவமனைக்கு வருவதே இல்லை. கனகாம்பரம் இரவு முழுவதும் தூங்காமல் தன்கணவனை எப்படி காப்பாற்ற வேண்டும் என்பதை யோசித்துக் கொண்டிருக்கிறாள். அவன் எவ்வளவு தான் இவளை கஷ்டப்படுத்தினாலும் தனது கணவன் உயிரை காப்பாற்ற வேண்டும் என்று நினைத்து போராடுகிறாள் கடைசியில் அவரது இரண்டாவது மகன் அவருக்கு இரண்டு லட்சரூபாய் கட்ட வருகிறான்.அதனைக் கண்டு மிகவும் மகிழ்கிறாள் கனகாமரம்.*

### ஆணோடு பிணைக்கப்பட்ட வாழ்வு

*'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்' என்பது நாட்டார் சொலவடையாகும். அதாவது கட்டிய கணவன் எப்படிப்பட்டவனானாலும் அவனை மனைவி கைவிட்டு விடக்கூடாது என்பதைப் பெண்களின் மனதில் அழுந்தப்பதிய வைக்கும் தன்மை கொண்டது இச்சமூகம். கனகாம்பரத்தின் கணவன் குடிகாரன்; குடும்பப் பொறுப்பு இல்லாதவன். தன்னுடைய உடல்நிலையைத் தானே சிதைத்துக் கொள்ளும் தன்மை உள்ளவன். ஆனாலும் அவனைக் காப்பாற்றுவதற்காகக் கனகாம்பரம் அல்லல்படுகிறாள். அவனால் தனக்கு ஏற்பட்ட துன்பங்களைப் புறந்தள்ளிவிட்டு, நோயுற்றிருக்கும் தன் கணவனைக் காப்பாற்றத் துடிக்கிறாள்.*

குடும்பம், கணவன் என்ற உறவுகளுக்குள் பெண்களின் தனித்துவம் எவ்வாறு அழிந்து போகிறது என்பதை எடுத்துக்காட்டும் சிறுகதையாக 'எட்டிமரம்' என்னும் இச்சிறுகதை அமைகிறது. பெண்கள் காலம் காலமாக எவ்வாறு குடும்பம் என்ற பந்தத்தில் கட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் பெண்ணை எவ்வாறு குடும்ப அமைப்பு அலைக்கழிக்கிறது, அவளுடைய உழைப்பை உறிஞ்சிக்கொழுக்கிறது என்பதையும் கவிப்பித்தனின் இச்சிறுகதை எடுத்துக்காட்டுகிறது.

## முடிவுரை

கவிப்பித்தன் எழுதியே அத்திபூ செண்பகம் ,எட்டிமரம் என்ற கதைகள் ஆனது பல்வேறு குணநலன்களுடைய மாந்தர்களைப் பற்றி சித்தரித்துள்ளது. இதில் பெண்கள் இன்னும் முற்போக்கு சிந்தனைகள் இல்லாம இருக்கிறங்கள் பெண்கள் என்னும் வெளியுலகம் தெரியாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். பெண்கள் பற்றிய சிந்தனைகள் என்பது இன்று மட்டுமல்ல பல்லாண்டுகாலமாக அவர்களிடத்தில் பல மாற்றங்களை இச்சமூகம் ஏற்படுத்திக் கொண்டுதான் வருகிறது. பெண்கள் முதலில் தன்னை தானே மாற்றிக்கொள்ள வேண்டும். முற்போக்கு சிந்தனைகள் இல்லாமல் இருந்தால் பெண்கள் இவ்வாறான தற்கொலை சிந்தனைகளுக்கு ஆளாவர் என்பதும் அல்லல்பட்ட அவல வாழ்க்கையில் உழல வேண்டியிருக்கும் என்பதையும் கவிப்பித்தன் வெளிப்படுத்துகிறார்.

## அடிக்குறிப்பு விளக்கம்

1. கவிப்பித்தன் 2014
2. ஊர்பிடாரி. ப. 1
3. பிணங்களின் கதை.ப . 134
4. பெண்ணியம் தோற்றமமும் வளர்ச்சியும். ப .1
5. வலைதளம் விக்கிபீடியா

## துணைநூற் பட்டியல்


1. கவிப்பித்தன். பிணங்களின் கதை
2. கவிப்பித்தன். ஊர்ப்பிடாரி
   வெளியீடு, பாரதி புத்தகாலயம்
3. இளங்கோ சாலை தேனாம்பேட்டை ,
   சென்னை – 600 018
4. கவிப்பித்தன். ஊர்ப்பிடாரி